செய்தி வெளியீடு எண்: 570 நாள்:06.08.2020

**இன்று (6.8.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கூட்டமைப்பு நிர்வாகிகளுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை:**

அனைவருக்கும் வணக்கம்.

திண்டுக்கல் மாவட்டத்தின் பிரதானத் தொழில் வேளாண்மை. மேலும், இங்கு 41 நூற்பாலைகள் உள்ளதாகவும், அதில் சுமார் 18 ஆயிரம் நபர்கள் பணிபுரிவதாகவும் தொழில் துறை புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. தொழில் கூட்டமைப்பு நிர்வாகிகள் வைத்துள்ள பல்வேறு கோரிக்கைகள் அரசால் பரிசீலிக்கப்படும். திண்டுக்கல் மாவட்டத்தில், அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ள, தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் ஏற்படுகின்ற சிரமங்களைக் களைவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். குறு, சிறு தொழில்கள் நடத்துவதிலுள்ள சிக்கல்கள் குறித்து கவனத்தில் கொள்ளப்படும். இ–பாஸ் வழங்குவதில் எவ்வித பிரச்சினையும் ஏற்படாதவாறு தெளிவான உத்தரவை அரசு வழங்கியுள்ளது. தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற அனைவருடைய பெயரையும், முகவரியையும் எழுதிக் கொடுத்தால் உடனடியாக அவர்களுக்கு மாவட்ட நிர்வாகம் அடையாள அட்டை கொடுப்பார்கள், அதை காண்பித்து நீங்கள் தொழிற்சாலைகளுக்கு வரலாம். மாதம் ஒருமுறை அதை புதுப்பித்தால் போதும். சிறு தொழில் புரிபவர்களுக்கும் அதேபோலத்தான். இங்குள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த வெளிமாநிலத் தொழிலாளர்கள் மீண்டும் தமிழகத்தில் பணியாற்ற விரும்பினால் அவர்களை தாராளமாக அழைத்து வரலாம். அவர்கள் குறித்த விவரங்களை அளித்தால், மாவட்ட ஆட்சித்தலைவர் இ–பாஸ் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வார். மேலும், அவர்களுக்கு கொரோனா நோய்த் தொற்றுப் பரிசோதனை செய்து, positive என்றால், அரசால் சிகிச்சை அளிக்கப்படும், negative என்றால், நிறுவனத்திற்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு பணி வழங்கலாம். அதேபோல, இன்னும் பல்வேறு கோரிக்கைகள் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறீர்கள், அரசு உயரதிகாரிகளுடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய அழைப்பை ஏற்று, இங்கு வருகை தந்த அனைத்து தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த உரிமையாளர்களுக்கும், தொழிற் கூட்டமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கும் அரசின் சார்பாக மனமார்ந்த, உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**